பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 17 வியாழக்கிழமை 30.05.2024 கதிர் 204

## மண்சரிவு அபாயப் பகுதிக்குள் 300 பாடசாலைகள் சிக்கின

மண்சரிவுஅதிஅபாய பகுதிகளில் 300-க்கும் மேற்பட்டபாடசாலைகள் காணப்படுவதாகதேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவ கத்தின்மண்சரிவுஆய்வு பிரிவின் பணிப்பாளர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அடையாளம் காணப் பட்டுள்ள குறித்த பாடசாலைகள் அமைந்துள்ள பகுதியில் இடர்களைக் கட்டுப் படுத்தும்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், மண்சரிவு அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் பல்வேறு அரச நிறுவனங்களும்காணப் படுகின்றன.

இதேவேளை, மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் சுமார் 14,000 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் அதில் 2600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். .

2500-க்கும் மேற்பட்ட குடும்பங் களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்று வதற்கான நடவடிக் கைகள் தற்போது முன்னெடுக் கப்பட் டுள்ளன. ☞ 8

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வேட்பாளர்கள் கூறவில்லை

### அது குறித்து ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு நாடாளுமன்றைப் பலப்படுத்தவேண்டுமெனவும் தெரிவிப்பு

எதிர்வரும் ஜனா திபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதில் வென்று ஜனாதிபதியாகப் போவதாகவும் சொல்லும் எந்நவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாக இதுவரை அறிவிக்கவில்லை. அதனால் நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை தயாரிக்க ☞ 2

## நான்கே மாதங்களில் ஒருவரை தற்கொலைதாரியாக்க முடிகிறது

### சரத் வீரசேகர எம்.பி. வெளியிட்ட தகவல்

4மாதங்களில்ஒருவரைத் தற்கொலைக்குண்டுதாரியாக மாற்றிவிட முடிகிறது என்பது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டுடன்இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர்இதனைத்தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பது தெரிந்த நிலையில் எப்படியாவது பதவியில்நீடிப்பதற்கானசாத்தியங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்கே தேடிக்கொண்டே இருக்கிறார். அதன் ஒரு பரிசோதனை முயற்சியாகத்தான் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இரண்டையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்தி வைககும் யோசனையை அவரது கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்தது.

ஆனால், இந்த யோசனைக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனைத் தவிர வேறு எவரும் ஆதரவு தரவில்லை. தெற்கு இந்த யோசனையைக் கேட்டதும் கடுமையாகக் கொந்தளித்தது. உடனடியாகவே தனது எதிர்வினையை ஆற்றயது. இந்த யோசனையை முன்வைத்தஐக்கியதேசியக்கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள சிறீகொத்தாவிற்கு முனன்பாக நேற்றுஉடனடியாகவேஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. தலைவர்கள் அனைவரும் இந்த யோசனையை எதிர்த்து காட்டமாகக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

எதிர்ப்பின் வீரியத்தைக் கண்டதும், தேர்தலைப் ☞ 2

# தேர்தல்களின் ஒத்திவைப்பு பிற்போக்கான முட்டாள்தனம்

### முன்னாள் தேர்தல்கள் ஆணையர் விமர்சிப்பு

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை 2 வருடங் களுக்கு ஒத்திவைப்பது என்று ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த யோசனை பிற்போக்குத்தனமான முட்டாள்தனம் என்று தேர் தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் ☞ 2

## நாடு முழுவதும் கடும் எதிர்ப்பலை

### ஹக்கீம் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்குநாடுமுழுவதும்கடும் எதிர்ப்பலை எழுந்துள்ளது என்று சிறீ லங்காமுஸ்லிம்காங்கிரஸின்தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பலையை உருவாக்கியுள்ளது. இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் தேர்தலை பிற்போடுவதற்கு நினைக்கவில்லை. கட்சியின் செயலாளின்கருத்துக்கள்அவரது ☞ 2

## இந்தியா தன் காலால் இட்டதை தலையால் செய்பவரே விக்கி

### பொது வேட்பாளர் நாடகம் சிங்கள வேட்பாளருக்கு ஆதரவானது என்று கஜேந்திரன் கடும் குற்றச்சாட்டு

இந்தியா காலால் இடுகின்றகட்டளையைத் தலையால் நிறைவேற்றுகின்ற வர்தான் விக்னேஸ்வரன். ஆகவே, இந்தியாவைப் பிடிகொடுக்கக்கூடாது என்பதற்காகஅவர்பொது வேட்பாளர் விடயத்தில் இந்தியா இல்லை எனக் கூறினாலும் தமிழ் மக்களை வாக்குச் சாவடிகளுக்கு இழுத்துச் செல்லும் முயற்சியே தமிழ்ப்பொதுவேட்பாளர் முன்மொழிவு. கடைசியில்சிங்களவேட்பாளர் ஒருவரை ஆதரிக்கக் கோருவார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர்கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ☞ 2

## தேர்தல்களை ஒத்தி வைத்தால் மீண்டும் போராட்டம் வெடிக்கும்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை

தேர்தல்களை ஒத்தி வைத்து ஜனநாயக மீறலில் ஈடுபட்டால் மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் ☞ 2

## பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம் கனவு மற்றும் கற்பனை கலந்த ஒன்று

### உதய கம்மன்பில தெரிவிப்பு

நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலம் மூர்க்கத்தனமானது, இது ஒரு கனவு மற்றும் கற்பனை சட்டமூலம் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானஉதயகம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில்நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியால் நாடாளுமன்றத் துக்கு சமர்ப்பிக் ☞ 2

## மைத்திரிக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக பதவி வகிப்பதை தடுத்து பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை ஜூன் 12 வரை நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பிற்கமைய, மைத்திரிபால சிறிசேன, கட்சியின் தவிசாளராக செயற்படுவதற்குஎவ்வித சட்டரீதியானஉரிமையும் காணப்படவில்லை என அவர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்அந்தபதவியை வகிப்பதைதடுத்து உத்தரவு பிறப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அரசமைப்புப்படியே ஜனாதிபதித் தேர்தல்

### பிரதமர் அறிவிப்பு

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

பொறுப்பற்ற கூற்றுகள் மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த ஜனநாயக ஆட்சியில் சந்தர்ப்பம் கிடைக்காது. செப்டம்பர் - ஒக்டோபர் மாதங்களுக்கு இடையில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும்,இதனை ஆளும்தரப்பும் அறிவித்துள்ளது.

பொறுப்பற்ற வகையில் தெரிவிக்கப்படும்கருத்துகள், ☞ 2

## சட்டவிரோத தங்க இறக்குமதிக்கு ரூ. 1,243 மில்லியன் அபராதம்

சட்டவிரோதமாக தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து நிறுவனங்களுக்கு1243மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதுகுறித்துஅமைச்சர் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவிக்கையில்,

நேரடி இறக்குமதியின்றி, மூன்றாம் தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் தங்க ஆபரணங்களுக்கும் அபராதம் விதிக்கப்படும்.வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதிக்குள், இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பிற்போடும் எண்ணம் எதுவும் தனக்கு இல்லை என்றும் அந்த யோசனை கட்சியின் பொதுச் செயலாளரின்தனிப்பட்ட யோசனை என்றும் ரணில் விக்கிரமசிங்க நைஸாகப் பின்வாங்கிவிட்டார். அதிகாரத்தில்ரணில்தொடர்வதையே அமெரிக்கா விரும்புகின்றது என்று சொல்லப்பட்டாலும்கூட, தேர்தலை ஒத்திவைக்கும் யோசனையை அடுத்து நேற்ற அவசரமாக தேர்தல்கள் ஆணைக்குழுவைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர ஜூலி சங், ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிட்ட திகதியில் நடத்தப்படும் என்கிற உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டார்.

அதுமட்டுமல்ல கட்சியின் செயலாளரின்யோசனையைஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே பலரும் அங்கீகரிக்காத வேடிக்கையும் இலங்கையில்தான் நடந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இது தொடர்பில் தனதுகண்டனத்தைபகிரங்கமாகவே தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சிச் செயலர் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

இப்படிப் ரணில் விக்கிரமசிங்க கால்வைக்கும்இடங்களில்எல்லாம் கண்ணிவெடிகளாக வெடித்தால் பாவம், பின்கதவால் வந்த பதவியைத் தொடர அவரும்தான் என்ன செய்வார்?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

காலியில் வைத்து நேற்றை யதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை பிற்போடுவது முற்றிலும் சட்டவிரோதமானது. அரசமைப்புக்கு முரனாணது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் பங்கேற்பின்றி மக்கள் பிரதிநிதித்துவம் தெரிவு செய்யப்படக்கூடாது.

உலகில் உள்ள சில சர்வாதிகார நாடுகள் இதனை முன்னெடுக்கின்றன. இலங்கையில் மக்கள் கருத்துக்கணிப்பின்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்ற, ஜனாதிபதி ஆகிய தரப்புக்களின் பதவிக்காலத்தினை நீடிப்பதற்கு இடமளிக்கக்கூடாது.

அவ்வாறான யோசனை முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதனை உடனடியாகவே தகர்த்தெறிய வேண்டும். அரசியல் தலையீட்டுக்கு இடமளிக்கக்கூடாது. மக்கள் ஆணை மூலம் இந்த அநீதியான யோசனை நிராகரிக்கப்படவேண்டும். இதுதொடர்பில் மீண்டும் விவாதிப்பதற்கு தேவையில்லை.

அனைவரும் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எதிர்ப்பினையே வெளியிட்டுள்ளனர். நாமும் அதனை எதிர்க்கின்றோம். அந்த யோசனை மகிவும் பிற்போக்கானது. முட்டாள் தனமானது -என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலத்தில் மூர்க்கத்தனமான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்விதமான இலக்கு மற்றும் எதிர்பார்ப்பும் இல்லாத வகையில் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. கனவுமற்றும்கற்பனை சட்டமூலம் என்றே குறிப்பிடவேண்டும்.

இந்தச் சட்டமூலத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்படும் ஆணைக் குழுக்களை ஜனாதிபதி நியமிக்கிறார். அவ்வாறு இருக்கையில் எவ்வாறு சுயாதீனமான முறையில் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும். புதிய மத்திய வங்கி சட்டத்தினால் ஏற்பட்ட நிலைமை இந்த சட்டமூலத்தின் ஊடாகவும் ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் எவ்விடத்திலும் இச்சட்டமூலம் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆகவே இந்த சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு முரணானது.

இந்த சட்டமூலத்துக்கு அமைய 2027 ஆம் ஆண்டுக்கு பின்னர் பொருளாதார வளர்ச்சியை 5 சதவீதத்தை காட்டிலும் அதிகரித்துக் கொள்வதற்கும், 2050 ஆம் ஆண்டு பெண் ஊழியப்படை பங்களிப்பை 50 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்வதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை அமைச்சரவைக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் போது அதற்கானதண்டனைகள் குறிப்பிடப் பட்டிருக்கும். வழங்கப்பட்ட பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றாவிடின் அமைச்சரவைக்கு வழங்கும் தண்டனை பற்றி இச்சட்டமூலத்தில் ஏதும் குறிப்பிடப் படவில்லை. ஆகவே இச்சட்டமூலம் பயனற்றது.

எமது சர்வஜன சக்தி என்ற புதிய அரசியல் கூட்டணி தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப் படுகிறது. கூட்டணிஅங்குரார்ப்பணம் செய்த போது எதிர்கால கொள்கை திட்டங்களை வெளியிட்டுள்ளோம் என்றார்.

## தேர்தல்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் தனது திட்டங்களை நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அவர் தேர்தலுக்கு முகம் கொடுக்கலாம். அதை விடுத்து தேர்தலை பிற்போடுவதற்கு முறையற்ற வகையில் செயற்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி , பொதுத் தேர்தல்களை நடத்தாது இன்னும் இரண்டாண்டுகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுமதி வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின்பொதுச்செயலாளர் ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிதேர்தலைநடத்தாமல் பதவிக்காலத்தை நீட்டித்துக் கொள்வதற்கு மக்கள்வாக்கெடுப்பை நடத்தும் யோசனைக்கு மக்கள் எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதை தெரிந்துக்கொள்வதற்காக ஜனாதிபதி தனது கட்சியின் செயலாளர் ஊடாக இவ்வாறான கூற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி தேர்தலை பிற்போட்டார் அதன்விளைவுமிகமோசமானதாக அமைந்தது. மாமன் வழியில் மருமகன் செல்கிறாரா என்பதை ஆராய வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கும், பாராளுமன்றத்தின் பதவி காலத்தை நீட்டிப்பதற்கும் நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டார்கள். ஜனாதிபதிக்கும், இந்த நாடாளுமன்றத்துக்கும் மக்களாணை என்பதொன்று கிடையாது. ஆகவே தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதும், போட்டியிடாமல் இருப்பதும் ஜனாதிபதியின் தனிப்பட்ட தீர்மானம். அவரது தனிப்பட்ட தீர்மானங்களை நாட்டு மக்கள் ஆராயவில்லை. ஜனநாயகத்துக்கு விரோதமாக செயற்பட்டால் நாட்டில் மீண்டும் போராட்டம் தோற்றம் பெறும். வரலாற்றில் தான் தவறான எடுத்துக்காட்டாக அடையாளப்படுத்தப்படுவதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட சிந்தனைக்குரியவை என்று தப்பிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றார்.

ஏற்கனவே பல தேர்தலைகளைப்பிற்போட்டவர் தற்போதைய ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களையும் அரசமைப்புக்கு விரோதமாக பிற்போடுவதற்கு வழிகள் இல்லாமையின் காரணமாக நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அதனைச் செய்ய முடியும் என்று கருதுகின்றார்.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லாத நிலையில், உறுப்பினர்களை விலைக்கு வாங்கி அதனைச் செய்து விடலாம் என்ற அதீதமான நம்பிக்கையில் முயற்சிக் கப்படுகின்றது. நாம் அவ்விதமான செயற்பாடுகளுக்கு இடமளிக் கப்போவதில்லை என்றார்.

## அரசமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கலந்துரையாடப்படாத விடங்களை முன்வைத்து, நாட்டில் குழப்பமான நிலையை தோற்றுவிக்கின்றமையானது, ஜனநாயக நாட்டிற்கு ஏற்புடையது அல்ல என்றார்.

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில பேசிய கஜேந்திரன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் முன்வந்து இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்குக் கையொப்பமிட்டுக் கடிதம் அனுப்பினார். 2016 ஆம் ஆண்டு மைத்திரி -- ரணில் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு தயாரித்த ஒற்றையாட்சி வரைபையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறாக, இந்தியாவின் முகவராக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்கவைப் பலப்படுத்துகின்ற செயற்பாட்டிலேயே விக்னேஸ்வரன் தொடர்ந்து செயற்படுகின்றார்.

இன்று ரணிலை வெல்ல வைக்கவேண்டிய தேவை இந்திய மற்றும் மேற்குலக நாடுகளுக்கு இருக்கின்றது. தமிழ் இனம் சார்ந்த கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு வருகைதருகின்றபோது அவருக்குச் செங்கம்பளம் விரித்து இவர்கள் வரவேற்பது கண்டிக்கத்தக்கது.

விக்னேஸ்வரன்,நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதை வரவேற்றிருக்கின்றார். ஆனால், குறித்த தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும் என்பதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது.

தேர்தல் பிற்போடப்படுவது ஜனநாயகப் படுகொலையையே நிகழ்த்தும்.

தமிழ் மக்கள் பேரவையில் பல தேசிய கருத்தியல்களை உள்ளடக்கி உள்ளேநுழைந்தவரே விக்னேஸ்வரன். ஆனால், இந்திய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவர் செயற்பட்டார். உலகில் எங்கும் இல்லாத வகையில் ஒரு நீதியரசர் தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை உருவாக்கி அதன் பின்னர் கொள்கை பற்றிப் பேசலாம் எனத் தெரிவித்தார். இது ஓர் உலக அதிசயம்.

இந்தியா காலால் இடுகின்ற கட்டளையைத் தலையால் நிறைவேற்றுகின்றவர்தான் விக்னேஸ்வரன். ஆகவே, இந்தியாவைப் பிடிகொடுக்கக்கூடாது என்பதற்காக அவர் பொது வேட்பாளர் விடயத்தில் இந்தியா இல்லை எனக் கூறுகின்றார்.

தமிழ் மக்கள் வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் மனநிலையில் இன்று இல்லை. ஆகவே, தமிழ் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச்சென்றுவாக்களிக்கும் மனநிலையை உருவாக்கவே இந்தப் பொது வேட்பாளர் நாடகம் அரங்கேறியுள்ளது.

இன்று கூட்டமைப்பினர் சொல்லும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்கும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை. இவ்வாறு மக்கள் வெறுப்படைந்த நிலையில் அரசுக்கு எதிராகச் செயற்படுவதாகக் கூறியே விக்னேஸ்வரன் போன்றோர் செயற்படுகின்றனர்.

அவ்வாறு பொது வேட்பாளர் யாரும் நிறுத்தப்பட்டால் கூட அவர் 72 மணித்தியாலங்களுக்கு முதல் சொல்லக்கூடும், 'எமது கோரிக்கைகளைசிங்களவேட்பாளர் களில்ஒருவர்ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு வாக்களியுங்கள்' - என்று கூறி விலககூடும். இல்லையெனில் இரண்டாவது விருப்பு வாக்கை சிங்களவேட்பாளருக்குவழங்குமாறு அவர் கூறுவார்.

தற்போது விடுபட்ட மனநிலையில் இருக்கும் மக்களை வாக்குச்சாவடிக்குக் கொண்டு செல்லவே இந்த நாடகம் ஆடப்படுகின்றது - - என்றார்.

## நிறைவேற்றதிகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இளம் சட்டத்தரணிகளுடன் நடைபெற்ற றூயவ'ள நேற சட்ட மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று ஜனாதிபதிஅலுவலகத்தில்நடைபெற்ற செயலமர்வில்கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவத:

இங்கிலாந்துநாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டத்தன் பின்னர் அதை யாரும் கேள்வி கேட்க முடியாது. அதுதான் நாடாளுமன்றத்தின் உயர் அதிகாரம். நாடாளுமன்றமே உச்சமானது.

அமெரிக்க அமைப்பு வேறு. அமெரிக்க அமைப்பில், அவர்கள் ஒரு சட்டத்தை உருவாக்கும்போது, ஜனாதிபதிக்கும் நிறைவேற்று அதிகாரங்களையும், காங்கிரசுக்கும் சட்டமன்ற அதிகாரங்களையும், நீதிமன்றங்களுக்கு நீதித்துறை அதிகாரங்களையும் வழங்கினர்.

நமது நாடு சமஷ்டி முறையை பின்பற்றாததால் ஆங்கிலேய முறையை கடைபிடிக்கிறோம். இந்தியா ஒரு சமஷ்டி நாடாக இருந்ததால் சமஷ்டி முறைக்கு செல்ல வேண்டியிருந்தது. ஆனால் நாம் ஒரு சமஷ்டி நாடு அல்ல. நமது நாட்டில் சட்டம் இயற்றும் இறுதி அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது.

இலங்கையில் பல ஆட்சி முறைகள் இருந்தன. ஒன்று ஆங்கிலேயர் கால முறைமை மற்றையது அதன்படியே அமைச்சரவை செயற்படுகிறது. மற்றையது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. சட்டமியற்றும் அதிகாரங்கள் சட்டவாக்க சபையிடம் உள்ளது. அதன்படி ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்து தெரிவாகும் போது, சட்டவாக்க சபைக்கு மற்றொரு கட்சியிலிருந்து உறுப்பினர்கள் தெரிவாகலாம்.

சுவிட்சர்லாந்தின் நாடாளுமன்ற முறையில், நாடாளுமன்றத்தால் சமஷ்டி செயற்குழுவினால் ஏழு பேர் நியமிக்கப்படுவர். நிறைவேற்று அதிகாரம் சமஷ்டி சபையிடம் காணப்படும்.

அந்நாட்டு முறைமைக்கமைய இரண்டுபிரதானகட்சிகளுக்கும்தலா இரண்டுஆசனங்கள்வழங்கப்படும். ஏனைய கட்சிகளுக்கு ஒரு ஆசனம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்டும் உறுப்பினர்கள் நிறுவனங்களை பகிர்ந்து கொள்வது தொடர்பில் கலந்தாலோசிக்க முடியும்.

அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டே நிறைவேற்று அதிகாரத்தையும் செயற்படுத்துவர். அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிக்கவும் நீக்கவும் பிரதமருக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....




காலைக்கதிர் Kalaikkathir

# திருக்கோணேஸ்வரர் ஆலய வழக்கு தொடர்பில் விமர்சித்த போலி முகநூல் பதிவொன்றிற்கு எதிராக வழக்குத் தாக்கல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் கோணேசர் ஆலய வழக்கு தொடர்பில் விமர்சித்த போலி முகநூல் பதிவொன்றிற்கு எதிராக நேற்று (புதன்கிழமை) வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செல்வக்கண்டு கனகநாயகம் விஜயநாதன் என்பவரால் 2024 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் பிரிவு 26 (1) இல் உள்ள ஏற்பாடுகளின் கீழ் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கினை பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி சின்னத்தம்பி சண்முகி தாக்கல் செய்திருந்தார். குறித்த மனுவை ஆதரித்து சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் மன்றில் தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

குறித்த வழக்கு தொடர்பில் சமர்ப்பணம் செய்கையில் -

மெய்யுறுதிப்படுத்தப்படாத முகநூல் கணக்கினை பயன்படுத்துபவரது அல்லது நிர்வகிப்பவரது ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும், குறித்த முகநூல் கணக்கு பயன்படுத்தப்படும் அமைவிடம் அவற்றோடு தொடர்புடைய ஏனைய நிகழ்வுகள் பற்றிய விடயங்கள் மனுதாரரால் எதிர்காலத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள வழக்கிற்கு அவசியமாக உள்ளமையால் கௌரவ மன்றானது தனது நியாயாதிக்கத்தைபிரயோகித்துமுகநூல்நிறுவனத்திடமிருந்தும், டயலொக் நிறுவனத்திடமிருந்தும் மேற்குறித்த விடயங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய விவரங்களை உடனடியாக பெறுவது தொடர்பாகவும் அவற்றை உடனடியாக கௌரவ நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாகவும் தேவையானதும், அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு 01இல்செயற்படுகின்றகுற்றவியல்விசாரணைதிணைக்களத்தின் கணணிக் குற்றங்கள் விசாரணைப் பகுதியின் சமூக ஊடகப் பிரிவின் பணிப்பாளருக்கு மேற்குறித்த விவரங்கள் மற்றும் நிகழ்வுகளை உடனடியாக பெறுவது தொடர்பாகவும் அவற்றை உடனடியாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாகவும், தேவையானதும் அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிடுவதற்கான கட்டளையைப் பிறப்பிப்பிக்குமாறும் சிரேஷ்ட சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தில் வேண்டிக் கொண்டார்.

அத்துடன், குறித்த ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்பட முடியாததுமான குறித்த முகநூலால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட கூற்றுக்கள் மற்றும் செய்திகள் மூலம் தனக்கும் தனது சார்பாக ரிஆர்./02/94 (ஏ) ஆம் இலக்க வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகளுக்கும் குறித்த ரிஆர்/02/94 (ஏ) ஆம் இலக்க வழக்கத் தொடர்பில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பதுடன் தானும்தனதுசட்டத்தரணிகளும்அவதூறுக்குஉட்படுத்தப்பட்டும் இன்னலுக்குஉள்ளாக்கப்பட்டும்உள்ளார்கள்எனவும்மனுதாரர் கூறுகின்றார். குறித்த வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணியுடன் எம்.பி.அன்பார் மற்றும் சட்டத்தரணி திருமதி. சின்னத்தம்பி சண்முகி ஆகியோர் மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்தார்கள்.

சிரேஷ்ட சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணம், மனுதாரரின் மனு, சத்தியக்கடதாசி மற்றும் அணைக்கப்பட்ட ஆவணங்கள் என்பவற்றை பரிசீலித்து அவற்றை கவனத்தில் எடுத்து மனுதாரர் தனது மனுவில் கூறியவாறு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா குறித்த கட்டளையை பிறப்பித்திருந்தார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்படாதமுகநூல்பதிவுக்குஎதிராகதிருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாவது வழக்கு இதுவாகும்.(05)

## நுவரெலியாவில் சீரற்ற காநிலையால் 171 குடும்பங்கள் பாதிப்படைந்தன

மலையகத்தில் நிலவும் கன மழை மற்றும் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 623 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என நுவரெலியா அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இந்த சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் 159 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அதன்படி, வலப்பனை பிரதேச செயலக பிரிவில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 195 பேரும், நுவரெலியா பிரதேச செயலக பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேரும், ஹங்குரான்கெத்த பிரதேச செயலக பிரிவில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 136 பேரும், கொத்மலை பிரதேச செயலக பிரிவில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை சிறிய பாதிப்புக்கள் ஏற்பட்ட குடியிருப்புக்களைச் சேர்ந்த சிலர் அதனை தற்காலிகமாக திருத்திக்கொண்டு அதே குடியிருப்புகளில் தங்கியுள்ளனர்.

வலப்பனை பிரதேச செயலக பிரிவில் 40 வீடுகளும், நுவரெலியா பிரதேச செயலக பிரிவில் 9 வீடுகளும், ஹங்குரான்கெத்த பிரதேச செயலக பிரிவில் 39 வீடுகளும், கொத்மலை பிரதேச செயலக பிரிவில் 71 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார மேலும் தெரிவித்தார்.(05)

## போதை மதன லேகியங்களுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி சேர்.ராசீக் பரீட் மாவத்தையிலுள்ள கடை ஒன்றிலிருந்து 70 மதன லேகியம் பக்கெற்றுகள் நேற்று (புதன்கிழமை) காலை கைப்பற்றப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் காத்தான்குடியில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் தற்போது காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 70 பக்கற்றுக்கள் மதன லேகியங்கள் கைப்பறப்பட்டுள்ளன.

அங்கிருந்த மோட்டார் சைக்கிளும் மாவட்ட குற்ற விசாரணை பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

தற்போது காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் மட்டக்களப்பு மாவட்ட குற்றவிசாரணை பிரிவினர் சந்தேக நபரையும் லேகியபக்கெட்டுகளையும் ஒப்படைத்துள்ளனர் .

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் குறித்த நபரை ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.கஜநாயக்கா தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

## 8 உணவகங்களுக்கு எதிராக அக்கரைப்பற்றில் நடவடிக்கை



அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் பொதுச்சுகாதார பரிசோதகர்களால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் கைப்பற்றப்பட்டு அவை அழிக்கப்பட்டன.



இதன்போது65உணவுகையாளும்நிறுவனங்கள் சோதனை செய்யப்பட்டு அதில் 8 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும்வர்த்தகர்கள்மற்றும்உணவகஉரிமையாளர்களுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதில், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ.காதர் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.இஸ்மாயில் உட்பட சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (05)

## அத்துருகிரிய விபத்தில் ஒருவர் பரிதாபச் சாவு

அத்துருகிரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்பு - மீதோட்ட வீதியில் ஹபரகடை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 5 பகுதியைச் சேர்ந்த 44 வயதுநபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பனாகொடயிலிருந்து அத்துரு கிரிய நோக்கிப் பயணித்த கெப் வண்டி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த சுவரொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது கெப் வண்டியின் சாரதி பலத்த காயமடைந்துள்ள நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அரசுத் தலைவர் பதவியும் நிறைவேற்றதிகாரமும் படும் பாடு

**எதிர்வரும் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதில் வென்று அரசுத் தலைவராகப் போகின்றனர் எனவும் சொல்லும் எந்நவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாக இதுவரை அறிவிக்கவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார் தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அதனால் நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.**

**2015 அரசுத் தலைவர் தேர்தலின்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் முழு ஒழிப்பதே முதன்மைப் பேசு பொருளாக இருந்தது. அந்தத் தேர்தலில் மைத்திரி – ரணில் கூட்டு வெற்றி பெறுவதற்கு இந்த விடயமும் மிக முக்கிய காரணமாக இருந்தது. ஆனால், இன்று நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றிய பேச்சுக்கள் காணாமல் போய்விட்டமை மட்டுமல்ல, அது தேவை என்று கருத்துரைக்கின்ற நிலையும் தோன்றியிருக்கின்றது. இது மிக மோசமான ஒரு முன்னேற்றம் என்றே கருதப்படவேண்டியிருக்கின்றது.**

**இந்த நிலையில்தான் தற்போது நிறைவேற்றதிகார ஒழிப்புக் குறித்தும் அதற்கெதிராக நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவது குறித்தும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.**

**’’இப்போதும் மாகாண சபைக்கு நிறைவேற்று அதிகாரங்கள் சில வழங்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதி நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்திற்குப் பிரிந்து செல்லும்**

**அரசுத்தலைவர்நாடாளுமன்றத்திற்குபொறுப்புக்கூறும் வகையில் சட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள பொருளாதார மாற்ற சட்டத்தின் ஊடாக அடுத்த 04 வருடங்களுக்கான ஆளும் தரப்பின் திட்டம் முன்வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு வருடமும் நடைமுறைப்படுத்தப்படும்வேலைத்திட்டங்கள்தொடர்பான முன்னேற்றங்கள்வருடஇறுதியில்நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கப்படவேண்டும். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவினால் முன்மொழியப்பட்ட மக்கள் சபை முறைமை சாத்தியமான ஒன்றாகும். அதேபோல் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படவிருக்கும் பாலின சமத்துவச் சட்டமும் நடைமுறைக்கேற்றது என்பதைக் கூற வேண்டும்” – என்று அரசுத் தலைவர் இப்போது கூறியிருக்கிறார்.**

**சில மாதங்களுக்கு முன்னர் நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது குறித்து இப்போது என்ன பேச்சு என்று கேள்வி கேட்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க. அவரே இப்போது நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தி நிறைவேற்றதிகாரத்தை மட்டுப்படுத்துவது குறித்துப் பேசுகின்றார். இவ்வாறு ஒவ்வொரு தடவையும் தமது சுயநலததிற்காக மாறி மாறி கருத்துரைப்பதை விடுத்து இதுதொடர்பில்ஒருதீர்க்கமானநிலைப்பாட்டுக்கு அரசியல்வாதிகள் வரவேண்டும்.**

# பாலியல் குற்றங்கள்: குழந்தைகளைப் பாதுகாக்கும் வழி

சரவணன் பார்த்தசாரதி

ஹங்கேரியின் முதல் பெண் அதிபராக 2022 இல் பதவியேற்ற கதலின் நோவேக், தனக்கு இருந்த மன்னிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனைக் குற்றவாளிகள் சிலரை விடுதலைசெய்தார். அவர்களில், சிறார் பாலியல் வன்கொடுமைதொடர்பாக அதிகாரத்தைத்தவறாகப் பயன்படுத்திய ஒரு நபரும் அடக்கம்.



இச்செய்தி வெளியானதும், பொதுச்சமூகம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் குதித்தனர். இதனையடுத்து அதிபர் கதலினும், அப்பட்டியலை அங்கீகரித்த அன்றைய சட்ட அமைச்சர் யூடித் வார்காவும் பதவிவிலகினர். குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை ஐரோப்பிய சமூகம் எவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்கிறது என்பதற்கு இச்சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

உலகெங்கும் வாழும் சிறார்களில் 18% பெண் குழந்தைகளும், 8% ஆண் குழந்தைகளும் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. சிறார் மீதான பாலியல்வன்கொடுமைஎன்பதுஅக்குழந்தைகளின் உடல், மன நலன் சார்ந்த ஒன்று மட்டுமல்ல; அது சமூகவியல் பிரச்சினையும்கூட. பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகும் குழந்தைகள் வாழ்நாள் முழுக்க மன அழுத்தத்துடனும், உடல்நலம் சார்ந்த சிக்கல்களோடும் வாழ நேர்கிறது.

இவற்றின்பலனாகவெறுப்பும், குற்றவுணர்வும், இயலாமையும் மேலோங்க, அவர்களில் சிலர் குற்றச்செயல்களில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். இது ஒரு சங்கிலித்தொடர்போல் நீடிக்கும்போது சமூகச் சமநிலை தொடர்பாதிப்புக்கு உள்ளாகிறது.

ஒப்பீட்டளவில்ஆண்குழந்தைகளைவிட, பெண் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகக் குற்றக்கணக்கீட்டு அறிக்கை தெரிவிக்கிறது. ஆண் குழந்தைகளும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாவார்கள், குற்றவாளிகள் பெண்களாக இருக்கக்கூடும் என்பதையும் வியப்பாகக் காணும் நிலையே இன்றுள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்தத் தரவுகள், கல்வி, பொருளாதார வளர்ச்சியில் முன்வரிசையில் இருக்கும் முற்போக்கான மாநிலமான தமிழ்நாடு சிறார் நலனில் மிகவும் பின்தங்கியுள்ளது என்பதையே காட்டுகின்றன. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறித்து அனைவருக்கும் புரிதலை ஏற்படுத்துவது, குழந்தைகள்பாதிக்கப்படும்போது, அவர்களுக்கான மருத்துவத் தீர்வுகள், ஆற்றுப்படுத்தும் வழி முறைகள், சட்ட உதவிகள் ஆகியவற்றை வழங்க வேண்டியது அரசின் கடமை. மாநில அளவில் இதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கினால்தான் அக்குழந்தைகளை மீட்டெடுத்துப் பொதுநீரோட்டத்தில் கலக்கச்செய்ய இயலும்.

பலவந்தமானபாலியல்தாக்குதல் (Penetrative sexual Assault), எல்லைமீறிய பலவந் தமான பாலியல் தாக்குதல் (Aggravated penetrative sexual assault), எல்லைமீறிய பாலியல் தாக்குதல் (Aggravated Sexual Assault), பாலியல் தொந்தரவு (Sexual Harassment) என்பன உள்ளிட்டவற்றைக் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் என வகைப்படுத்தி, அவற்றுக்கான தண்டனைகளையும் சட்ட வழியிலான தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் ஊடகங்கள், மருத்துவர்கள், காவலர்கள், நீதித்துறையினர் இப்பிரச்சினைகளில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்என்பது குறித்த வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

வேறு யாரிடமும் அதிகாரத்தைச் செலுத்த இயலாதசிலர்தங்களைவிடப்பலவீனமாகஇருக்கும் குழந்தைகள்மீது பாலியல் தாக்குதல் தொடுப்பது உண்டு. முறையான பாலுறவுக்கான வாய்ப்பற்றோர், பாலுணர்வுக் குறைபாடு கொண்டோர், போதை அடிமைகள், மனநல பாதிப்புகொண்டோர், பிறவியிலேயே குழந்தைகள்மீது காமம்கொள்ளும் நிலை கொண்டோரும் (born pedophile) இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் ‘வாடிக்கைக் குற்றவாளி’களாக (habitual offender) இருக்கின்றனர்.

இது மிகச் சிக்கலான நிலை என்றாலும், இந்த வாடிக்கைத்தனம்தான்அவர்களைக்கண்டறியவும், கட்டுப்படுத்தவும் காரணியாக அமைகிறது. குற்றச்சாட்டுக்கு உள்ளானோரைத் தொடர் கண்காணிப்பில்வைத்திருப்பது, குற்றவாளிகளைத் தனிமைப்படுத்தி, குழந்தைகளிடம் இருந்து வெகுதூரம் விலக்கிவைப்பது, அவர்கள் குறித்த பகுதிவாரியான பதிவேடுகளைப் பராமரிப்பது, சிறைத்தண்டனை முடிந்து விடுதலையாகும் குற்றவாளிகளைக் கண்காணிக்க முறையான அமைப்புகள், முறைமைகளை உருவாக்குவது ஆகியவற்றுடன் அவர்களுக்கு உளவியல், மருத்துவச் சிகிச்சைகள் அளிப்பதும் அவசியம். இதன்மூலம் அவர்கள் மீண்டும் இத்தகைய குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்க முடியும்.

அதேபோல், அதிகார அழுத்தங்களைப் பயன்படுத்திஇக்குற்றவாளிகள்தண்டனையிலிருந்து தப்பிவிடாமல் இருக்க மேற்கத்திய சமூகங்களின் சட்ட, சமூகநடவடிக்கைகளைநாம்முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது.

குழந்தைகளைக் காப்போம்: முதற்கட்டமாக இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் தனிநபர் சார்ந்த தகவல்கள் (personal information), அவர்களுடைய சமூக, பொருளாதாரப் பின்னணி, குற்றம் நிகழ்ந்த இடம், நேரம் உள்ளிட்ட தகவல்களைச் சேகரிப்பதன் வழியே இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கான வழிமுறைகளை நம்மால் உருவாக்க முடியும்.

தரவுகளையும், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தையும் இணைத்து இத்தகைய குற்றங்களை முன்கூட்டியே துல்லியமாகக் கணிக்கவும் இயலும். அதுசார்ந்த ஆய்வுகளை முன்னெடுப்பது இன்றைய காலத்தில் கட்டாயம். ஆனால், அதற்கான தரவுக் கட்டமைப்போ, ஒருங்கிணைப்போ, ஒத்துழைக்கும்மனநிலையோ அரசு இயந்திரத்திடம் இல்லை.

குழந்தைகளுக்குஎதிராகக்குற்றமிழைப்பவர்கள், அவர்களுக்குத் துணைநிற்பவர்கள் அனைவருமே சமூகத்துக்கு எதிரான பிறழ் மனநிலை கொண்டவர்கள்; அது மட்டுமல்ல - அவர்கள் அறம் பிறழ்ந்தவர்களும்கூட. ஜனநாயக அமைப்பில் அறத்தைக் கூற்றாக்கி, நீதியை நிலைநாட்டுவது மக்களாகிய நம் கைகளில்தான் உள்ளது. மானுடகுலத்தின் விதை நெல்களான குழந்தைகளைக் காப்பதுதான் நம் தலையாய கடமை. அதற்கான முயற்சிகளை இன்றே, நமது மாநிலத்தில் இருந்து தொடங்குவோம்.

# மூன்று நாள் இசைத்தமிழ் விழா நாளை கொழும்பில் ஆரம்பம்

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை திறப்பு.



(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் மூன்று நாள் இசைத்தமிழ் விழா நாளை(31) வெள்ளிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஆரம்பமாகின்றது.

துறவறநூற்றாண்டையொட்டிகொழும்புதமிழ்ச்சங்கத்தில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவப்படவுள்ளது.

இந்துசமயகலாசாரஅலுவல்கள்திணைக்களப்பணிப்பாளர் யூ.அனிருத்தனின் ஏற்பாட்டில் கொழும்புதமிழ்ச்சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை(31) முதல் சனி(1) ஞாயிறு(2) தினங்களில் நடைபெறும்.


நாளை(31) பிற்பகல் சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலையுடன்சைவமங்கையர்வித்தியாலயத்திலிருந்து கொழும்பு தமிழ்ச் சங்கம் வரை ஊர்வலம் இடம்பெறும்.

பின்பு 4 மணியளவில் அங்கு சுவாமி விபுலானந்தரின் சிலை ஆறுமுகநாவலரின் சிலைக்கு இடப் புறமாக திறந்து வைக்கப்பட இருக்கிறது.


கொழும்பு தமிழ்ச்சங்க வரலாற்றில் முதல் தடவையாக நிறுவப்படும் இத் திருவுருவச் சிலையை, தற்போதைய தலைவர் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரன் தலைமையில் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் திறந்து வைப்பார்.

இச் சிலையை சாஹித்தியரத்னா தி. ஞானசேகரன் திருமதி ஞானலக்ஷ்மி ஞானசேகரன் அன்பளிப்புசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாளை பிற்பகல் தொடக்கம் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு அங்கு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின்
துறவு நூற்றாண்டு 1924 - 2024




குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இரு கூட்டுறவு கிராமிய வங்கிகளை உடைத்து நகைகள், பணம் திருட்டு

## கசினோவுக்கு அடிமையாகிய ஒருவர் கைது

இரு கூட்டுறவு கிராமிய வங்கிகளை உடைத்து பல கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் ஆகியன திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின்அடிப்படையில்சந்தேகநபரொருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வென்னப்புவ, அங்கம்பிட்டி பகுதியில் உள்ள கூட்டுறவு கிராமிய வங்கியில் 6 கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தையும் ஜா-எல, கனுவான பகுதியிலுள்ள கூட்டுறவு கிராமிய வங்கியிலிருந்து 2 கோடி ரூபா பெறுமதியுடையதங்கஆபரணங்கள்மற்றும் பணத்தையும் சந்தேகநபர் திருடியுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் பிலியந்தலை மடபாத்தபகுதியைச்சேர்ந்த30வயதுடையவர் எனவும், கசினோ விளையாட்டிற்கு அடிமையாகியுள்ள நிலையில் திருட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, இரண்டு வங்கிகளிலும் திருடப்பட்ட தங்க ஆபரணங்களை விற்பனை செய்து கிடைத்த பணத்தில் களியாட்ட விடுதிகளுக்குச் சென்று கசினோ விளையாடியதாகசந்தேகநபர்பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், திருடிய பணத்தில் வென்னப்புவ பகுதியிலுள்ள நபரிடமிருந்து கார் ஒன்றை வாங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# மாணவியின் ஆபாசப் புகைப் படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டவர் கைது

மாணவியின் ஆபாச புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மத்தேகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நுகேகொடை பிரதேசத்தில் உள்ள தனியார் வகுப்பு ஒன்றுக்குச் சென்றுள்ள நிலையில் அங்கு மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயது மாணவியுடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இவர் ஒரு வகை மருந்துகளைப் பயன்படுத்துவதாகச் மாணவிக்குத் தெரியவந்துள்ள நிலையில் அவர் இது தொடர்பில் தேடிப் பார்த்த போது இந்த இளைஞர் ஒருவித காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்துகொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த மாணவி, இளைஞருடனான காதல் உறவை முறித்துக்கொண்டுள்ளதுடன்மற்றுமொருஇளைஞரொருவருடன் காதல்உறவில்ஈடுபட்டுள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அறிந்துகொண்ட சந்தேக நபரான இளைஞர், இந்த மாணவியுடன் காதல் உறவில் ஈடுபட்டிருந்த காலத்தில் பெற்றுக்கொண்டதாகக்கூறப்படும்மாணவியின் ஆபாச புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

சமூக ஊடகங்களில் இந்த புகைப்படங்களைப்பார்த்தமாணவியின்நண்பர்கள்சிலர்இது தொடர்பில் மாணவிக்குத் தெரிவித்ததையடுத்து அவர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை கெஸ்பாவ நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளை மத்தேகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இலங்கையின் முதலாவது ஸ்ட்ரோபெரி முன்மாதிரி கிராமம் நுவரெலியாவில்



இலங்கையின் முதலாவது ஸ்ட்ரோபெரி செய்கைமுன்மாதிரிகிராமம்நுவரெலியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் உள்ள நான்கு கிராமங்களை அடிப்படையாக கொண்டு இந்த ஸ்ட்ரோபெரி உற்பத்தி முன்மாதிரி கிராமத்தை அமைப்பதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இரண்டு கோடி ரூபாய் செலவில் 50 விவசாயிகளை பயன்படுத்தி 42 காப்பக வீடுகளில் இந்த ஸ்ட்ரோபெரி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்குதேவையான நிதிவளம், செய்கைக்கான ஸ்ட்ரோபெரி செடிகள் உட்பட செய்கை நடவடிக்கைகளுக்கு தேவைப் படும் தொழில்நுட்ப வளங்கள் மற்றும் நீர்வளம் என்பவற்றை கமநல அபிவிருத்திதிணைக்களத்தினால்வழங்கப்படும்.

இந்த ஸ்ட்ரோபெரி செய்கைக்கு ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஸ்ட்ராபெரி செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

ஸ்ட்ரோபெரி செடிகள் பாதுகாப்பாக பசுமைக் கூடாரங்களில் நடுகை செய்யும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது.(05)

# இந்த வருட இதுவரையான காலத்தில் 24,645 டெங்கு நோயாளர்கள் பதிவு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24,645 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேல் மாகாணத்திலிருந்து அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து5,289 நோயாளர்களும்,கம்பஹா மாவட்டத்திலிருந்து 2,309 நோயாளர்களும் மற்றும் களுத்துறை மாவட்டத்திலிருந்து 1,307 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில்தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம்இருப்பதாகவும்இதனால்பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் அமைச்சு தெரிவித்துள்ளது. (05)



## நிறைவேற்றதிகார....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை, அந்த ஏழு பேரில் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்பர்.

மற்றைய முறை இலங்கையில் இருந்த டொனமோர் முறை. அந்த அமைப்பில், நிர்வாக அமைப்பு ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் சபாநாயகராக செயல்பட்டார். அந்த ஏழு பேரில் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் அமைச்சராக பதவியேற்றார். அந்த அமைச்சர்களில் ஒருவர் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் மூன்று செயலாளர்களை ஆளுநர் நியமித்தார். அமைச்சர்கள் குழு, பத்து பேரைக் கொண்டது. இந்த பத்து பேரில் தலைமைச் செயலாளர் தலைவராக செயல்பட்டார். இந்த நிர்வாகக்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்பிறகு பிரான்ஸ் முறைமை வந்தது. அதன் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மக்கள் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். இந்த முறையே இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதில் சாதக பாதகங்கள் இரண்டுமே உள்ளன.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வகித்து நாட்டுக்கு பெரும் பணி ஆற்றியுள்ளார். மகாவலி, சமனல குளம், லுணுகம்வெஹர போன்ற பாரிய திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. கோட்டே தலைநகராக மாற்றப்பட்டது. இரண்டு வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் 11 வருட யுத்தத்திற்கு மத்தியில் செயற்படுத்தப்பட்டவையாகும்.

அத்துடன் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச, சுமார் இருநூறு ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இல்லாவிட்டால் இலங்கைப் போரில் வெற்றி கிடைத்திருக்காது. இலங்கையில் நெருக்கடி ஏற்பட்டு ஆட்சி கவிழும் என வெளிநாடுகள் எதிர்பார்த்தன. ஜனாதிபதியொருவர் இருந்ததால் அந்த அதிகாரத்தை யாராலும் பறிக்க முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு அந்த அதிகாரம் இருந்ததாலேயே அவரால் இராணுவத்தை நிலைநிறுத்தி போரில் வெற்றிபெற முடிந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது அது முறையாக பயன் படுத்தப்படவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி தனியாகவும், நாங்கள் தனியாகவும் செயற்பட வேண்டிய நிலைமை உருவானது. போராட்டத்தின் போது நிறைவேற்று அதிகாரம் இருந்ததாலேயே நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்தது. அன்று பிரதமர் பதவியை ஏற்க யாரும் முன்வரவில்லை. அப்போது ஜனாதிபதி கப்பலில் ஏறி திருகோணமலை சென்ற போது சிலர் என்னை பிரதமர் பதவியில் இருந்து விலகச் சொன்னார்கள்.

அதன்போது, பெரும்பான்மை உள்ள ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்றும். இல்லாவிட்டால் நான் பதவி விலக முடியாது என்றும் கூறினேன். பதவி விலகுவதற்கான கடிதத்தை எழுதினாலும் அதனை ஜனாதிபதியிடமே கையளிக்க வேண்டும். ஜனாதிபதி கப்பலில் தஞ்சம் புகுந்திருந்து காரணத்தினாலும், நாட்டை விட்டு மாலைத்தீவுக்கு சென்றதாலும் என்னால் அந்த கடிதத்தை வழங்க முடியாது. அழுத்தங்கள் மற்றும் எனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட காரணத்தினால் நான் பதவி விலகியிருந்தால் ஜனநாயகத்திற்கு முரணாகவே எவரேனும் நாட்டை கைபற்றியிருப்பார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதில் வென்று ஜனாதிபதியாகப் போவதாகவும் சொல்லும் எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாக இதுவரை அறிவிக்கவில்லை. அதனால் நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டியது அவசியம்.

இப்போதும் மாகாண சபைக்கு நிறைவேற்று அதிகாரங்கள் சில வழங்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதி நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்திற்குப் பிரிந்துச் செல்லும்

ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் வகையில் சட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள பொருளாதார மாற்ற சட்டத்தின் ஊடாக அடுத்த 04 வருடங்களுக்கான அரசாங்கத்தின் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் வருட இறுதியில் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கப்படவேண்டும். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவினால் முன்மொழியப்பட்ட மக்கள் சபை முறைமை சாத்தியமான ஒன்றாகும். அதேபோல் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படவிருக்கும் பாலின சமத்துவச் சட்டமும் நடைமுறைக்கேற்றது என்பதைக் கூற வேண்டும் - என்றார்.

## நான்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்.ரி.ஜே. எனப்படும் எமது நாட்டில் செயற்படுகின்ற தேசிய தௌபீக் ஜமாஅத் அமைப்பில் இணைந்திருந்தவர்களே குஜராத்தில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையர்களாக அடையாளம் காணப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தேசிய தௌபீக் ஜமாஅத் அமைப்பில் பெப்ரவரி நான்காம் திகதி இணைந்துள்ளனர்.

அவர்கள் அந்த அமைப்பில் இணைந்து நான்கு மாதங்களே ஆகின்றன. இதில் உள்ள அபாயத்தினை புரிந்து கொள்ளவேண்டும். நான்கு மாதங்களுக்குள் ஒருவரை தற்கொலைத் தாக்குதலைச் செய்யுமளவிற்கு மாற்றமுடியும் என்பது உண்மையில் மிகவும் ஆபத்தான விடயமாகும்.

விளையாட்டுத்தனமாக நாட்டின் தேசிய பாதுகாப்பை சீர்செய்ய முடியாது. கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தினைப் பயன்படுத்த வேண்டும். அவர்களை பலவந்தப்படுத்தியேனும் புணர் வாழ்வுக்கு உட்படுத்தவேண்டும்.

தேசிய பாதுகாப்புக்கான துறைசார்ந்த மேற்பார்வைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில், நான் ஜூன் ஐந்தாம் திகதி பரிந்துரைகளைச் செய்யவுள்ளேன். குறிப்பாக எமது பொலிஸ் குழுவொன்று குஜராத்துக்குச் சென்று அங்குள்ள கைதானவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் அடுத்த கட்டமாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கேட்பேன் என்றார்.

## மண்சரிவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான பிரதேசங்கள் மண்சரிவு அதி அபாய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்றார்.

## சட்டவிரோத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன. அந்த நிறுவனங்களுக்கு 1243 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோத இறக்குமதியுடன் தொடர்புடைய நிறுவனமொன்றுக்கு 179 மில்லியன் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிடப் பட்டுள்ளது. இதன் பின்னர், தங்கப் பொருட்களை இறக்குமதி செய்யும், அனைத்து உரிமம் பெற்ற நிறுவனங்களும், சட்டவிரோத செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

நேரடியாக இறக்குமதி செய்யாமல், மூன்றாம் தரப்பினர் ஊடாக கொள்வனவு செய்யப்படும் தங்கத்திற்கும், உற்பத்தி அறிக்கையினை ஆராய்ந்து, அதன் பிரகாரம் அபாராதம் விதிக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதலில் சிகிச்சைபெற்றுவந்த பெண் 5 வருடங்களின் பின் உயிரிழப்பு

கடந்த 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் 5 வருடங்களின் பின் உயிரிழந்துள்ளார்.

ஐந்து வருடங்களாக சிகிச்சை பெற்றுவந்த திலினி ஹர்ஷனி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் திலினி ஹர்ஷனி படுகாயமடைந்திருந்ததுடன், அவரது மகன் துலோத் அந்தோனி சம்பவத்தில் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், திலினி ஹர்ஷனிக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், அவர் தற்போது உயிரிழந்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் 8 இடங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில், 273 பேர் உயிரிழந்திருந்ததுடன், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு தடை

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.83 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு தற்காலிகத் தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில் -

விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் சுமார் 55 ஆயிரம் சதுர அடி காணியில் கண்ணிவெடிகள் காணப்படகூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தால் உரிய தீர்வு காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதி வரை விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு செல்ல வேண்டாம் என காணி உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது கண்ணிவெடிகள் காணப்படும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டால் அந்த பகுதிகளை தவிர்த்து ஏனைய காணிகளுக்குள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு பின்னர் பொதுமக்கள் தங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்ணிவெடிகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை உரிய நடைமுறைகளை பின்பற்றி செயலிழக்கச் செய்யப்பட்டு அகற்றப்படவுள்ளன. அதன் பின்னர் குறித்த பகுதிகள் கண்ணிவெடி அற்ற பிரதேசமாக அறிவித்தல் விடுக்கப்பட்டதும் பொதுமக்கள் எவ்வித இடையூறும் இன்றி தங்களின் காணிகளுக்குள் செல்ல முடியும். பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி இந்தத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

வசாவிளான் கிழக்கு(ஜே - 244), வசாவிளான் மேற்கு(ஜே - 245), பலாலி வடக்கு(ஜே - 254), பலாலி கிழக்கு(ஜே-253), பலாலி தெற்கு(ஜே - 252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.83 ஏக்கர் காணி விவசாய நடவடிக்கையின் நிமித்தம் அண்மையில் விடுவிக்கப்பட்டது. இராணுவ கட்டுப்பாட்டிற்குள் காணப்பட்ட இந்த பகுதிக்கு பொதுமக்கள் இலகுவாக செல்லக்கூடிய வீதிகளும் வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. - என்றுள்ளது.

# வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி ஓகஸ்ட் மாதம் நிறைவு பெறுமாம்

## அதிவேக வீதி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு



வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி பணிகள் ஓகஸ்ட் மாதம் நிறைவு பெறும் என அதிவேக வீதி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் பௌர்ணமி தினத்திற்கு முன்பதாக வடக்கு ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் நிறைவடைய வாய்ப்பில்லை.

எனவே, பொசன் பௌர்ணமி தின விடுமுறையை முன்னிட்டு விசேட பஸ் சேவையொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த பஸ் சேவை பொசன் பௌர்ணமி தினத்தன்றும் அதற்கு முந்திய நாளிலும் அமுல்படுத்தப்படும்.

விசேட பஸ் சேவை அட்டவணை தொடர்பில் அறிவிக்கப்படும் எனவும், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் துறை பஸ் சேவையாளர்களுடனும் கலந்துரையாடி விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

# பட்டமளிப்பு விழா பிற்போடுவது இளங்கலை மாணவர்களின் உரிமைகளை மீறுவதாகும்

## கலாநிதி பிரபாத் ஏகநாயக்க சுட்டிக்காட்டு

கல்வி ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பட்டமளிப்பு விழாவை பிற்போடுவது இளங்கலை மாணவர்களின் உரிமைகளை பாரியளவில் மீறுவதாகப் பேராதனை பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏகநாயக்க எழுத்து மூலம் உபவேந்தருக்கு அறிவித்துள்ளார்.

அதில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

பல்கலைகழகத்தின் மிக முக்கிய கல்வி நிகழ்வான பட்டமளிப்பு விழா ஒரு சிலரின் தன்னிச்சையான நடவடிக்கையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளேன்.

இந்த முடிவு எங்கள் மதிப்புமிக்க பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளின் உரிமைகளை கடுமையாக மீறுகிறது என்று நான் நம்புகிறேன்.

கல்வி சாரா சங்கங்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் தொலைநோக்கு பார்வையற்றவர்களே இந்த நிலைக்கு முழு பொறுப்பு. இந்நிலைமையை கல்விசாரா ஊழியர்களும் பல்கலைக்கழக நிர்வாகமும் கண்டிக்க வேண்டும்.

கல்வி சாரா சங்க தலைவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் பீடாதிபதிகளாகிய நாமும் இந்த மனித உரிமை மீறலின் அங்கமாகி விடுவோம்.

பட்டமளிப்பு விழா போன்ற மிக முக்கியமான விழாவை ரத்து செய்ய வற்புறுத்திய பல்கலைக்கழக நிர்வாகமும் ஊழியர்களின் தொழிற்சங்கமும் மருத்துவ பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பனந்தருவை' இசை நிகழ்ச்சிக்கு ஆதரவளித்தன. ஆனால் அவை எந்த அடிப்படையில் என்பதைப் புரிந்து கொள்வது கடினம்.

எனவே, பட்டமளிப்பு விழாவை சீர்குலைக்கும் நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, இது தொடர்பாக பல்கலைக்கழக நிருவாக மன்றக்குழுவுக்கு உரிய முறையில் தகவலை தெரிவித்து, மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# பிரபல வர்த்தகர் ஒருவர் 20 வயதுடைய நபரை கடத்தி கொடூரமாக தாக்கிய குற்றச்சாட்டில் கண்டியில் கைது

கண்டியில் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான பிரபல வர்த்தகர் ஒருவர் 20 வயதுடைய நபரை கடத்திச் சென்று ஹோட்டல் அறையொன்றில் அடைத்து வைத்து கொடூரமாக தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் ஹோட்டல் உரிமையாளர் கண்டி பொலிஸ் நிலைய குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கண்டியில் உள்ள பிரதான ஆண்கள் பாடசாலையொன்றின் மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் என்பதுடன் போலி ஆவணங்களை தயாரித்து மாணவர்களை அனுமதித்த குற்றச்சாட்டையும் அவர் சுமத்தியுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான கண்டி, ரஜபிஹில்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில், தாக்குதலுக்கு உள்ளான இளைஞன் வரவேற்பாளராகப் பணியாற்றியவர் என பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பளம் வழங்கப்படாமையால் குறித்த இளைஞன் விடுதியை விட்டு வெளியேற விரும்புவதாகவும் சந்தேகநபர் அதற்கு அனுமதிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பின்னர் குறித்த இளைஞன் ராஜினாமாக் கடிதத்தை கையளித்து விட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது சந்தேக நபர் கெப் வண்டியில் வந்து இளைஞனை பலவந்தமாக அதில் ஏற்றி ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

ஹோட்டல் அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் கொடூரமான முறையில் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டதன் பிரகாரம், குறித்த வர்த்தகரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் 27 ஆம் திகதி திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத்தின் பணிப்புரையின் பேரில் குற்றப் பிரிவு நிலைய பிரிவின் பிரதம பொலிஸ் பரிசோதகர் நளீன் இந்திக்க உள்ளிட்ட குழுவினர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சித்தர், விஜயகலா ஆகியோர் முயற்சியால் ஸ்கந்தாவுக்கு ரூ. 110 மில்லியன் ஒதுக்கீடு

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கமைய சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் கேட்போர் கூடகட்டட நிர்மாணத்திற்கு 110 மில்லியன் ரூபா நிதி ஜனாதிபதியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு முதல் கட்டமாக 70 மில்லியன் ரூபா நிதி நேற்று (புதன்கிழமை) பாடசாலைக் கட்டட நிர்மாணத்துக்காக விடுவிக்கப்பட்டு கட்டட நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க அப்போதைய நல்லாட்சி அரசால் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதோடு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் வேண்டுகோளுக்கிணங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு புதிய கேட்போர் கூட கட்டடத்திற்கான அடிக்கல்லினையும் நாட்டி வைத்திருந்தார்.

நாட்டின் ஸ்திரமற்ற அரசியல் நிலை காரணமாக குறித்த வேலை திட்டம் முடிவுறுத்தப்படாமை தொடர்பில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கலந்துகொண்ட மருத்துவ பீட புதிய கட்டட திறப்பு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனால் குறித்த விடயம் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டதோடு முன்னாள் கல்வி ராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டுவரப்பட்டிருந்தது.

மேற்படி விடயம் தொடர்பில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உடனடியாக ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கையினையடுத்து 110 மில்லியன் ரூபா நிதியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் கேட்போர் கூட கட்டட நிர்மாணத்துக்காக ஒதுக்குமாறு ஜனாதிபதியால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதோடு முதல் கட்டமாக 70 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதோடு மிகுதி 40 மில்லியன் எதிர்வரும் வாரமளவில் விடுவிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# ரஷ்யாவுக்கு அனுப்புகிறோம் என கூறி பண மோசடியிலீடுபட்ட மூவர் கைது

ரஷ்யாவுக்கு அனுப்புவதாகக் கூறி 140 பேரை ஏமாற்றி பணம்பெற்ற மூவர் மொரட்டுவை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சாரதி பயிற்சி நிலையத்தை நடத்துபவர் என பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த நிலையத்தை பொலிஸார் சோதனையிட்ட போது வெள;வேறு நபர்களின் 39 கடவுச்சீட்டுகள் மற்றும் போலி ஆவணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சாரதி பயிற்சி நிலையத்தை நடத்தும் பிரதான சந்தேகநபர் மற்றும் ஏனைய சந்தேக நபர்கள் ஒருவரிடமிருந்து 06 லட்சம் முதல் 14 லட்சம் வரை பணம் பெற்றுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ளவர்கள் இந்த மோசடியில் சிக்கியுள்ளதுடன் இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகளையும் வழங்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கட்டுபெத்த மொரட்டுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

## பஸ் கவிழ்ந்து விபத்து ; 27 பேர் படுகாயமடைவு

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் பெல்மதுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது.

எம்பிலிப்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த் திசையில் பயணித்த ஓட்டோவுடன் மோத முற்பட்டுள்ள நிலையில் அதனைத் தவிர்க்க முயன்ற பஸ்ஸின் சாரதி பஸ்ஸை திருப்ப முற்பட்ட போது வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்து வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது 27 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 7 பேர் இரத்தினபுரிபோதனாவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## திமிங்கல வாந்தியுடன் இரு மீனவர்கள் கைது

### கற்பிட்டியில் சம்பவம்



கற்பிட்டி, கந்தகுளிய பிரதேசத்தில் சுமார் 23 கோடி ரூபா பெறுமதியான 23 கிலோ நிறையுடைய திமிங்கல வாந்தியுடன் இரண்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்இந்தமீனவர்கள்



புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான மீனவர்கள் கந்தகுளி பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர்கள் எனபொலிஸார்தெரிவித்தனர்.

இந்த மீனவர்கள் கடலில் மிதந்த திமிங்கல வாந்தியை இரகசியமான முறையில் எடுத்துச் சென்றமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

மீனவர்களிடமிருந்த திமிங் கலவாந்தியைபொலிஸார்கைப் பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2024இல் வெளியிடப்பெற்றது